# இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலக தேசிய புலமைச் சொத்து நிதியம் - 2012

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய புலமைச் சொத்து நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

வாடிக்கையாளர்களின் கைத்தொழில் திட்டங்களையும் குறியீடுகளையும் பதிவுசெய்தல் மற்றும் மாற்றம் செய்தல்களை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்காக வாடிக்கையாளர்கள் தொடர்பாக நிதியம் பெற்றுக்கொண்ட பணத்தை பொறுப்புக்கள் கணக்கில் நிறுத்திவைத்து அதற்குரிய செலவுகளை அக்கணக்கிற்கு வரவுவைப்பதற்குப் பதிலாக பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் நிதியத்தின் வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக நிதியத்தின் வருமானம் தொடர்பான சரியான நிலைமை நிதிக்கூற்றுக்களின் மூலம் வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

நிதிப் பிரமாணம் 880 மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணைக் கட்டளைச் சட்டத்தின் 612 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம் பிணைவைக்க வேண்டிய அரசாங்க உத்தியோகத்தர்களிடமிருந்து பிணையைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்காக நிதியத்தின் செயற்பாடுகளிலிருந்து உருவாகிய நிதிசார் விளைவுகள் ரூபா 47,715,331 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 42,862,389 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகள் ரூபா 4,852,942 ஆல் முன்னேற்றமடைந்தற்காக மீளாய்வாண்டில் முதலீட்டு வருமானம் ரூபா 7.8 ஆல் அதிகரித்தமை விசேடமாகத் தாக்கமளித்திருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

நிதிசார் விளைவுகளில் மிகைகள் அதிகரித்தமை தொடர்பாக பின்வரும் விடயங்கள் தாக்கமளித்திருந்தன.

| விபரம் | ஆண்டு 2012 | ஆண்டு 2011 | நிதிசார் விளைவுகளில் அதிகரிப்பு | நிதிசார் விளைவுகளில் அதிகரிப்பு சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | % |
| ஆக்க உரிமை | 5,012,774 | 4,339,251 | 673,523 | 16 |
| முதலீட்டு வருமானம் | 40,479,756 | 32,673,971 | 7,805,785 | 24 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

**வியாபாரக்குறி, ஆக்கவுரிமை உத்தரவுப் பத்திரம், கைத்தொழில் திட்டங்கள் என்பவற்றைப் பதிவுசெய்தல்**

மீளாய்வாண்டில் வியாபாரக் குறிகள், ஆக்கவுரிமை உத்தரவுப் பத்திரம், கைத்தொழில் திட்டங்கள் என்பவற்றைப் பதிவுசெய்யும் செயலாற்றல் முன்னைய ஆண்டிற்கான செயலாற்றலுடன் ஒப்பிடப்பட்டுக் கீழே தரப்படுகின்றது.

| | வியாபாரக் குறிகளைப் பதிவுசெய்தல் | | ஆக்கவுரிமை உத்தரவுப் பத்திரங்களை பதிவுசெய்தல் | | கைத்தொழில் திட்டங்களைப் பதிவு செய்தல் | |
|---|---|---|---|---|---|---|
| | 2012 | 2011 | 2012 | 2011 | 2012 | 2011 |
| முன்னைய ஆண்டிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 22,538 | 19,864 | 1,287 | 1,081 | 823 | 573 |
| ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பப் பத்திரங்களின் எண்ணிக்கை | 9,036 | 7,657 | 539 | 429 | 394 | 443 |
| ஆண்டின் போது பதிவுசெய்யப்பட வேண்டிய எண்ணிக்கை | 31,574 | 27,521 | 1,826 | 1,510 | 1,217 | 1,016 |
| ஆண்டின் போது பதிவுசெய்து கொண்ட எண்ணிக்கை | 2,854 | 4,983 | 301 | 223 | 262 | 193 |
| அடுத்துவரும் ஆண்டுகளுக்கு முன்கொண்டு சென்ற பதிவுசெய்து கொள்ளப்படாத எண்ணிக்கை | 28,720 | 22,538 | 1,525 | 1,287 | 955 | 823 |
| பதிவுசெய்து கொள்வதற்கு வேண்டிக்கொண்ட போதிலும் பதிவுசெய்து கொள்ளாத விண்ணப்பங்களின் சதவீதம்(%) | 91 | 81 | 84 | 85 | 78 | 81 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் வியாபாரக் குறிகளை பதிவுசெய்வதற்காகப் பெற்றுக்கொண்ட விண்ணப்பப் படிவங்களில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதுவித நடைமுறையும் எடுக்கப்படாதிருந்த விண்ணப்பப் படிவங்கள் 28,720 ஆக இருந்ததுடன் அது ஆண்டிற்குள் பதிவு செய்யவேண்டியிருந்த மொத்த விண்ணப்பப் படிவங்களின் அளவில் 91 சதவீதமாகும். அது முன்னைய ஆண்டின் சதவீதமான 81 சதவீதத்தினை விஞ்சியிருந்தது. மீளாய்வாண்டின் போது பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களுடன் ஒப்பிடும் பொழுது மேற்கூறிய எஞ்சியுள்ள விண்ணப்பங்களின் அளவை மாத்திரம் பூர்த்தி செய்வதற்கு இன்னும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் எடுக்கலாம்.

(ஆ) மீளாய்வாண்டின் போது பதிவு செய்யவிருந்த 1896 மொத்த ஆக்கவுரிமை விண்ணப்பங்களில் 301 விண்ணப்பங்களை பதிவுசெய்திருந்தமை முன்னைய ஆண்டினை விட செயல்முன்னேற்றத்தினைப் பெற்றிருந்த போதிலும் நிறைவேற்ற வேண்டியிருந்த அளவில் அது 16 சதவீதமான குறைந்த சதவீதத்தினைக் கொண்டிருந்தது. அரைவாசியாகப் பூர்த்தி செய்த மற்றும் முழுமையாகக் கைவிட்ட விண்ணப்பங்கள் தொடர்பான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கடந்த ஆண்டுகளிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட 823 கைத்தொழில் திட்ட விண்ணப்பங்களும் மீளாய்வாண்டின் போது கிடைத்த 394 விண்ணப்பங்களுமாக 1,217 கூட்டுமொத்தமான விண்ணப்பங்கள் மீளாய்வாண்டின் போது பதிவுசெய்ய வேண்டியிருந்ததுடன் அதில் 262 விண்ணப்பங்கள் மாத்திரம் பதிவுசெய்யப்பட்டிருந்தன. கைத்தொழில் திட்டங்களைப் பதிவுசெய்வதற்கு 1,217 விண்ணப்பங்கள் மீளாய்வாண்டிற்காகக் கிடைத்திருந்தும் நிதியம் இதில் 22 சதவீதம் அல்லது 262 விண்ணப்பங்களை மாத்திரம் பதிவுசெய்திருந்தது. அரைவாசியாகப் பூர்த்திசெய்த மற்றும் கைவிடப்பட்ட விண்ணப்பங்கள் தொடர்பான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மேலே குறிப்பிடப்பட்ட தகவல்களின் பிரகாரம் வியாபாரக் குறிகள், ஆக்கவுரிமை உத்தரவுப் பத்திரம், கைத்தொழில் திட்டங்கள் என்பவற்றைப் பதிவுசெய்தல் இலங்கை தேசிய புலமைச் சொத்து அலுவலகத்தின் பிரதான செயற்பாடாக இருந்த போதிலும் அச் செயற்பாட்டை நிறைவேற்றுதல் மிகவும் பலவீனமான நிலையில் காணப்பட்டது. இதன் காரணமாக புதிய ஆக்குனர்கள் ஆர்வமற்று இருந்ததுடன் உரிய காலத்தில் பதிவுசெய்து கொள்ளப்படாமையால் ஆக்குனர்களின் புதிய ஆக்கங்களிலிருந்து பொருளாதாரத்திற்குக் கிடைக்கும் பங்களிப்பு கிடைக்காதிருந்தது. மிகுதியான விண்ணப்பங்களை விரைவாகப் பதிவுசெய்வதற்கான உபாயமார்க்கங்களும் செயற்பாட்டு நடைமுறைகள் தொடர்பாக நிதியம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

### (அ) காப்பகமும் சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நிலையமும் நிர்மாணித்தல்

தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திற்காக காப்பகமும் சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நிலையமும் நிர்மாணித்தல் மற்றும் அது தொடர்பான ஏனைய செயற்பாடுகளுக்காக 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளில் ரூபா 22,978,101 கூட்டுமொத்த தொகை செலவு செய்யப்பட்டிருந்தது.இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) உரிய காணிகளின் உரிமை மற்றும் உள்ளமையை உறுதிப்படுத்தாது நிர்மாணிக்கப்பட்டதனால் அதற்காகச் செலவு செய்யப்பட்ட ரூபா 22,978,101 தொகையான பணம் விளைவற்ற செலவாகியிருந்தது.

(ii) ஒப்பந்தக் கம்பனியுடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2008 திசெம்பர் 18 ஆந் திகதியளவில் ஒப்பந்தம் பூர்த்திசெய்யப்பட வேண்டி இருந்தும் அது இடையில் கைவிடப்பட்டிருந்தது.

(iii) நிர்மாண வேலைகள் 2008 திசெம்பர் மாதத்தின் போது கைவிடப்பட்டதன் பின்னர் இரண்டரை ஆண்டுகள் அளவான காலம் காணி பாதுகாப்பின்றியும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாதும் காணப்பட்டது. அக்கட்டிடத்தினை ஆக்கபூர்வமாக ஏனைய அரசாங்க நடவடிக்கைகளுக்காக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) நிர்மாண வேலை செய்த ஒப்பந்தக் கம்பனிக்கு முற்பணமாகச் செலுத்தப்பட்ட பணத்தில் மீண்டும் அறவிடவேண்டியிருந்த ரூபா 4,549,750 தொகையான பணத்தை 2013 யூன் 30 ஆந் திகதி வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) புலமைச் சொத்து வசதிகள் வழங்கும் நிலையத்தை தோற்றுவித்தல்

வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மேற்கூறிய 03 நிலையங்களைத் தோற்றுவிப்பதற்காக ரூபா 04 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அக்குறிக்கோள் அடைந்து கொள்ளப்படவில்லை.

**3.3 ஆளணி நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புலமைச் சொத்து அலுவலகத்தின் பணிப்பாளர் நாயகம் பதவி உட்பட நிறைவேற்று மட்டத்திலுள்ள ஐந்து பதவிகள் 2007 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு இறுதி வரை வெற்றிடமாகக் காணப்பட்டிருந்தும் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2013 மே 31 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதியத்தின் அதிவிசேடமான பதவிகளுக்கு மத்தியில் புலமைச் சொத்து தொழில்நுட்ப உதவியாளர், புலமைச் சொத்து ஆராய்ச்சி உத்தியோகத்தர், ஆவணம் மற்றும் தரவு உதவியாளர் மற்றும் புலமைச் சொத்து உத்தியோகத்தர் ஆகிய பதவிகளின் 27 அங்கீகரித்த பதவியணியினர்களில் 11 பதவிகள் 2013 மே 31 ஆந் திகதி வரை வெற்றிடமாகக் காணப்பட்டது.

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 கூட்டிணைந்த திட்டம்**

நிதியத்தின் துூர நோக்கு மற்றும் செயற்பணிகளை நிறைவேற்றுவதற்காக நிதிய தொடர்பாக கூட்டிணைந்த திட்டம் மீளாய்வாண்டை உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 கொள்வனவுத் திட்டம்**

கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் பிரதான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 உள்ளகக் கணக்காய்வு**

நி.பி 133 மற்றும் 134(3) இன் பிரகாரம் நிதியத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக உள்ளக கணக்காய்வு அமுல்படுத்தப்பட்டு அதன் கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் அமைச்சின்

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு நிதியத்தின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளையும் உள்ளடக்கியிருந்தது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் அவ்வப்போது புலமைச் சொத்து பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வியாபாரக் குறி, ஆக்கவுரிமை உத்தரவுப் பத்திரம், கைத்தொழில் திட்டங்கள் என்பவற்றை பதிவுசெய்தல்

(இ) மனித வளங்கள் முகாமைத்துவம்

(ஈ) நிர்மாண ஒப்பந்தம்